**முகப்போவியம்: 465**



### யு.எஸ்.எஸ்.ஆர்.

# கோ. நடராசன்

— முனைவர் இளமாறன்

ஒருங்கிணைந்த சோவியத் யூனியனின் தென் மண்டலத்திற்கான சென்னைத் தூதரக புத்தகத்துறை மேலாளராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றி அவர்தம் பெயருக்கு முன்னொட்டாக யு.எஸ்.எஸ்.ஆர். எனச் சிறப்பிக்கப் பெறுபவர் திரு. யு.எஸ்.எஸ்.ஆர். கோ.நடராசன் அவர்கள்.

சோவியத் யூனியன் வெளியீடுகளையெல்லாம் தமிழகத்திற்கு நிறைவாகப் பெற்றுத் தந்து அறிவுக் கண்ணைத் திறக்கும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். கல்வி, இலக்கியம், அரசியல் போன்ற துறைகளில் முன்னணியினரையெல்லாம் கண்டறிந்து அவர்கள் சோவியத் யூனியன் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ள பெரிதும் உதவியவர்.

இலக்கிய வட்டாரத்திலும், அரசியல் வட்டாரத்திலும், இதழியல் துறையிலும் யு.எஸ்.எஸ்.ஆர். என்றாலே அது யு.எஸ்.எஸ்.ஆர். கோ.நடராசன் அவர்களைக் குறிக்கும் என்கிற அளவிற்குப் புகழ் பெற்றவர்.

தென்னார்க்காடு மாவட்டம் தற்போதைய கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம். சி.சாத்தமங்கலம் என்னும் ஊரில் திருவாளர் பி.கோவிந்தராசன் - திருமதி கோ. பத்மாவதி இணையருக்கு 26.02.1953இல் பிறந்தவர்.

பள்ளிக் கல்வியை சிதம்பரம் வட்டம் பொன்னன் கோவில் இராசாம்பாள் ஆச்சி ஆதாரப் பாடசாலையிலும், ஒரத்தூர் வெற்றி நடுநிலைப் பள்ளியிலும், ஒரத்தூர் திருவள்ளுவர் உயர் நிலைப் பள்ளியிலும் முடித்தவர். பின்னர் மயிலாடுதுறை மன்னம் பந்தல் ஏ.வி.சி. கல்லூரியில் புகுமுக வகுப்பும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை, முதுகலை (பொருளியல்) பட்டமும், இளநிலை கல்வியியல், முதுநிலை கல்வியியல் பட்டங்களும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பி.ஜி.எல். பட்டமும், தில்லிப் பல்கலைக் கழகத்தில் டிப்ளமோ இன் யுனைடெட் நேஷன்ஸ் ஸ்டடீஸ்

ஆகிய படிப்புகளையும் முடித்தவர். படிப்பிற்கேற்ற பணி கிடைக்க வில்லை என்று கவலைப் படாமல், தொடக்கத்தில் வேளாண்மை, டிராக்டர் நிறுவன மேலாளர், அரிசி ஆலை கணக்கர் எனப் பல பணிகளைப் பார்த்தவர்.

பின்னர் இவரது உறவினர் திரு. சிவ.சுப்பராயன் அவர்களின் வழிகாட்டலில் நியூசெஞ்சுரி அச்சகத்தில் மெய்ப்புத் திருத்துநராக 1977இல் பணியில் சேர்ந்தார். கடுமையான உழைப் பும் தன்முனைப்பும், தனித்திறனும் இவரை அப்பணியிலிருந்து ஓராண்டிலேயே நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் பதிப்புத் துறையில் பணியாற்றும் வாய்ப்பும், சென்னை விற்பனையகத்தின் பொறுப்பாளராகவும், அதன் விற்பனை ஊக்குவிப்பு அதிகாரி யாகவும் உயர்த்தியது.

1982இல் சோவியத் தூதரகத்தின் புத்தக மையம் தொடங்கப்பட்டபோது அதன் உதவி மேலாளராக, பின்னர் துணை மேலாளராக, அதன்பின் நான்கு தென் மாநிலங்களுக்கான வட்டார மேலாளராகப் பணியாற்றிவர். இக்காலக் கட்டத்தில் 'சோவியத் புக் ரீடர்ஸ் கிளப்' என்னும் அமைப்பை உருவாக்கி அதன் பொதுச் செயலாளராகவும் இருந்தவர்.

திங்கள்தோறும் புத்தகக் கண்காட்சிகள், கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், நேருக்குநேர் நிகழ்ச்சிகள் எனப் பல நிகழ்ச்சிகளைக் குழந்தைகள், மகளிர், இளைஞர்கள் முன்னேற்றத் திற்காகவே ஏற்பாடு செய்து நடத்தியவர். இதன் மூலம் தமிழகத்தின் புகழ்வாய்ந்த பெருமக்கள் பலரின் தொடர்பும் நட்பும் கிடைத்தது தம்மை உயர்த்திக் கொண்டவர்.

குறிப்பாக 1980இல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆலோசனையின் பேரில், செல்வி ஜெ.ஜெயலலிதா அம்மையாருக்கு சோவியத் இலக்கியம், சமூகம், அறிவியல் விஞ்ஞான நூல்களை அவரது இல்லத்திற்கே சென்று அளிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இவரது சிறிய தாத்தா திரு.இராஜகோபால் பிள்ளை கலைஞர் அவர்களுக்கு திருவாரூர் பள்ளியில் தமிழ் கற்பித்தவர். திரு. யு.எஸ்.எஸ்.ஆர். கோ.நடராசன் அவர்கள் கலைஞர் அவர்களைச் சந்திக்கும்போது தம் ஆசிரியரைக் கலைஞர் நெகிழ்வோடு நினைவு கூர்ந்துள்ளார். 1990ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின், மேனாள் மேயர் திரு.சா.கணேசன் ஆகியோரை சோவியத் இரஷ்யாவிற்கு அனுப்பி வைக்கப் பெரிதும் உதவியுள்ளார்.

எழுத்துலக வேந்தர் த.ஜெயகாந்தன் அவர்களுடனான நட்பு ஜெயகாந்தனின் இறுதி நாள்கள் வரை இவருக்கு நெருக்க மாக இருந்தது. இவருடைய இல்லத் திருமண அழைப்பிதழ்களில்

ஜெயகாந்தன் அன்புடன் அழைப் பவராக இருந்துள்ளார். இவருடைய மகன், மகள் திருமணங்களில் பட்டுவேட்டி - சட்டையுடன் அனைவரையும் ஜெயகாந்தன் வரவேற்று மகிழ்ந்ததை இக் கட்டுரையாளரும் கண்டிருக்கிறார்.

திரு. யு. எஸ். எஸ். ஆர். கோ. நடராசன் (1) பயணங்கள் முடிவதில்லை (சோவியத் இரஷ்யப் பயண நூல்). (2) எங்கும் சுத்தம் எதிலும் சுத்தம், (3) தொலை பேசியும் டிரான்சிஸ்டரும், (4) மாமா விளக்கிய அறிவியல் அதிசயங்கள், (5) சிறுவர்க்கான சிறுகதைகள், (6) நல்ல மனம் வேண்டும், (7) விழித்திருப்போம் விடியலுக்காக - பாகம்:1, (8) பாகம்:2, (9) அர்த்தமுள்ள வாழ்வுக்கு 60 வழிகள் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

இரசிய நாட்டைச் சேர்ந்த விண்வெளி வீரர் யூரி ககாரின் நினைவைப் போற்றுகின்ற வகையில், தம் மகனுக்கு 'ககாரின்' என்ற பெயரும், இரசிய நாட்டைச் சேர்ந்த உலகின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை வாலண்டினா தெரஷ்கோவாவைப் போற்றுகின்ற வகையில் தம் மகளுக்கு 'வாலண்டினா' என்றும் பெயரிட்டு மகிழ்ந்துள்ளார்.

இவர் பத்மா பதிப்பகம், வாலண்டினா பப்ளிகேஷன்ஸ் எனும் இரு பதிப்பகங்கள் மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளார். புகழாளர் பலரின் நூல்கள் இப்பதிப்பகங்கள் மூலம் வெளி வந்துள்ளன.

தொண்டுள்ளத்துடன் பல அமைப்புகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவரைப் பாராட்டிப் பல அமைப்புகள் இவருக்கு 35க்கும் மேற்பட்ட விருதுகளும் பட்டயங்களும் வழங்கிச் சிறப்பித் துள்ளன. அவற்றில், 'சிறந்த சாதனையாளருக்கான டாக்டர் அப்துல்கலாம் விருது, தென்னிந்தியப் புத்தக விற்பனை யாளர் மற்றும் பதிப்பாளர் விருது, தமிழக அரசின் சிறந்த பதிப்பாளர் விருது (6 முறை), சிகாகோ 5ஆம் உலகத் திருக்குறள் மாநாட்டு சிறப்பு விருது, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கம் வழங்கிய சிறப்புப் பட்டயம், இந்தோ-இரசிய பண்பாட்டு நிறுவனத்தின் பரிசு, நெய்வேலித் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் விருது, அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்க விருது, பாரதி நெல்லையப்பர் விருது, புதுதில்லி NUBC விருது, சுவாமி சங்கரதாஸ் நினைவு மன்றம் வழங்கிய விருது' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பிறருக்கு உதவும் தொண்டுள்ளமும் சிரித்த முகமும் இவரது நட்பு வட்டத்தைப் பெருக்கி அனைவருக்கும் நெருக்கமாக்கி உள்ளது.. எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிவரும் இவரின் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்தி மகிழ்கிறோம்.

பேச: 99413 85795